Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 01/2020** |
| Sessions | .. | .. | } | |
| | | } | Prosecution – **PW–1** | |
| Deposition of witness for | | } | Defence – | |
| | | } | Court – | |

| | | |
|---|---|---|
| Name | : | விக்னேஷ் குமார் |
| Father/Husband Name | : | துரை |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | இந்து |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2021

முதல் விசாரணை–

நான் தற்போது மதுரை கிழக்கு வட்டம் காளிகாப்பான் 2 வது பிட் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.02.2014 ல் வரிச்சியூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது காலை 6.15 மணியளவில் கிராம உதவியாளர் கோமதி என்பவரிடமிருந்து எனக்கு போன் வந்தது. அடையாளம் தெரியாது ஆண் பிணம் ஒன்று வரிச்சியூர் நியாய விலைக்கடையின் கிழக்கு பக்கச் சுவர் அருகில் கிடப்பதாக கூறினார். நான் நேரில் சென்று பார்த்தேன். அந்த பிரேதத்தில் கழுத்தில் சிறிய இரத்தத் தடிப்பு இருந்தது. நான் சந்தேகத்தின் பேரில் கருப்பாயூரணி காவல் நிலையம் சென்று தகவல் சொன்னேன். போலிசார் பிரேதத்தை வந்து பார்த்துவிட்டு பிரேதத்தின் சட்டைப் பையில் சாவி, பென் டிரைவ், சிறிய துண்டுச் சீட்டு ஒன்று ஆகியவை இருந்தது. அந்தச் துண்டுச்சீட்டில் இருந்த முகவரியை வைத்து

இறந்தவரின் பெற்றோருக்கு போலிசார் செல்போனில் தகவல் தெரிவித்தார்கள். நான் அது சம்மந்தமாக கருப்பாயூரணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ–1. பின்னர் 08.01.2015 அன்று என்னைப் போலிசார் விசாரணைக்கு கூப்பிட்டார்கள். அங்கு இருந்த எதிரிகள் சரவணன், உதயகுமார், பால்பாண்டி ஆகியோரிடம் போலிசார் வாக்குமூலம் வாங்கினார்கள். எதிரிகள் சரவணன் மற்றும் பால்பாண்டி இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இருப்பதாக சாட்சி அவர்களை அடையாளம் காட்டினார். 1ம் எதிரி சரவணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வினோத்மணி என்பவர் இராமநாதபுரத்தில் கொலை செய்யப்பட்டதாகவும், அந்த விபரம் இறந்த அருண்குமாருக்கு தகவல் தெரியும் என்பதால் அருண்குமார் வெளியில் சொல்லிவிடக்கூடாது என்பதால் பிராந்தியில் விஷத்தை கலந்து அருண்குமாரின் வாயில் ஊற்றி கொலை செய்து பிரேதத்தை வரிச்சியூரில் உள்ள நியாய விலைக்கடை அருகில் போட்டதாகவும் தன்னை கூட்டிச்சென்றால் தன்னுடைய வீட்டில் வைத்திருக்கும் பணம் ரூ.15,000/–ஐ எடுத்து ஆஜர் படுத்துவதாகவும் சொன்னார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ–2. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்று இரவு 7.00 மணியளவில் கருப்பாயூரணி காவல்நிலைய ஆய்வாளர் என்னையும், கிராம உதவியாளர் கோமதியையும் எதிரிகளையும் கூட்டிக்கொண்டு சரவணன் தங்கியிருந்த சிலைமான் அருகில் உள்ள ஜெயபாரத் அபார்ட்மெண்டுக்கு கூட்டிச்சென்றார். அந்த இடத்தை ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பார்வை மகசரில் நானும், கிராம உதவியாளர் கோமதியும் கையெழுத்து செய்தோம். பார்வை மகசர் அ.சா.ஆ–3. சரவணன் தங்கியிருந்த ரூமிலிருந்து பணம் ரூ.15,000/–ஐ ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரில் நானும், கிராம உதவியாளர் கோமதியும் கையெழுத்து செய்தோம். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ–4. அதன் பின்னர் சம்பவம் நடந்த இடத்திற்கு நாங்கள் சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள பணம் ரூ.15,000/–ஐ இதுநாள் வரை இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்–1 நீதிமன்றத்திலிருந்து இந்த நீதிமன்றத்திற்கு இதுநாள் வரை சமர்ப்பிக்கவில்லை என்பதால் முன்விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 01/2020** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW-2** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | கோமதி |
| Father/Husband Name | : | ஈஸ்வரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | இந்து |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2021

முதல் விசாரணை–

நான் தற்போது மதுரை வரிச்சியூர் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.12.2014 அன்று நான் வரிச்சியூர் கிராம உதவியாளராக பணியில் இருந்தபோது காலை 6.30 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது எனக்கு ஒரு நபர் போன் செய்து வரிச்சியூர் ரேசன் கடை பக்கத்தில் ஒரு ஆண் பிணம் கிடக்கிறது என்று தகவல் சொன்னார். நான் உடனே என்னுடைய கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் தெரிவித்தேன். உடனே கிராம நிர்வாக அலுவலரும், நானும் சேர்ந்து வரிச்சியூர் ரேசன் கடை பக்கத்தில் சென்று அங்கிருந்த பிரேதத்தை பார்த்தோம். அதன் பின்னர் கிராம நிர்வாக அலுவலர் கருப்பாயூரணி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். அவர்கள் சம்பவ இடம் வந்து பிரேதத்தின் சட்டப்பையில் இருந்த வண்டிச் சாவி, பென் டிரைவ், ஒரு துண்டுச் சீட்டு ஆகியவற்றை எடுத்தார்கள். துண்டுச்சீட்டில் இருந்த முகவரியை

வைத்து இறந்தவரின் அப்பாவுக்கு போலிசார் தகவல் கொடுத்தார்கள். பிரேத பரிசோதனைக்காக இறந்தவரை மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அதன் பின்னர் ஒரு வாரம் கழித்து போலிசார் இறந்த நபரை கொலை செய்தவர்களை பிடித்துள்ளோம் என்றும், கருப்பாயூரணி காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். உடனே நானும், விஏஓ ம் சேர்ந்து கருப்பாயூரணி காவல் நிலையம் சென்றோம். அங்கிருந்த எதிரிகளிடம் போலிசார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதன் பின்னர் ஜெயபாரத் அபார்ட்மெண்டுக்கு நானும், கிராம நிர்வாக அலுவலரும் போலிசாருடன் எதிரிகள் கூட்டிச்சென்ற இடத்திற்கு சென்றோம். ரூ.15,000/–ஐ அந்த அபார்ட்மெண்டிலிருந்து எடுத்தார்கள். ஒப்புதல் வாக்குமூலம், பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றில் நானும், விஏஓ ம் கையெழுத்து செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 01/2020** |
| Sessions | .. | .. | } | |
| | | } | | Prosecution – **PW-3** |
| Deposition of witness for | | } | | Defence – |
| | | } | | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சுரேஷ் |
| Father/Husband Name | : | முனியாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | இந்து |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2021

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் மாரியம்மன் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். காய்கறிகடை வைத்து தொழில் செய்கிறேன். சாட்சி லதா என் மனைவி ஆவார். சாட்சி சக்தி என் அண்ணன் ஆவார். சாட்சி செந்தில்வேலன் என் பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். ஆஜர் எதிரிகளைத் தெரியும். இவ்வழக்கில் இறந்துபோன அருண்குமார் என் மகன் ஆவார். 12.02.2014 ம் தேதி வெள்ளிக்கிழமை மதியம் 2.30 மணியளவில் நான், என் மனைவி, என் மகன் அருண்குமார் ஆகியோர் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். அப்போது என் மகனுக்கு ஒரு போன் வந்தது. அப்போது நான் என் மகனிடம் யார் என்ற கேட்டேன். அதற்கு சரவணன் என்றும் மதுரையில் எனக்கு வேலை வாங்கி தருவதாக கூறி அவனை சரவணன் மதுரைக்கு கூப்பிட்டதாக கூறினார். பின்னர் நான் சாப்பிட்டு விட்டு துாங்கிவிட்டேன். பின்னர் அன்று மாலை 6.00 மணிக்கு துாங்கி எழுந்து என் மனையிடம் என் மகன் அருண்குமாரைப் பற்றி கேட்டேன். அதற்கு என் மனைவி சரவணன் அருண்குமாரை கூப்பிட்டதால் சர்ச் பக்கத்தில் உள்ள பெட்ரோல் பல்க்கிற்கு

வரச்சொல்லிவிட்டதாக அருண்குமார் போய்விட்டதாக என்னிடம் சொன்னார். அன்று இரவு நான் பஜாருக்கு போய்விட்டு திரும்ப வீட்டிற்கு வந்து என் மனைவியிடம் கேட்டபோது அருண்குமார் வீட்டிற்கு வரவில்லை என்று சொன்னார். அதன் பின்னர் அருண்குமாரின் செல்போனுக்கு தொடர்பு கொண்டபோது தொடர்பு கிடைக்கவில்லை. அதன் பின்பு காலையில் அருண்குமார் வந்துவிடுவான் என்று இருந்தோம். மறுநாள் காலை 13.12.2014 அன்று நானும், என் அண்ணன் சக்தியும் சேர்ந்து மதுரையில் உள்ள என் தம்பி செல்வத்தின் வீட்டிற்கு சென்றோம். செல்வத்திடம் என் மகன் அருண்குமாரைப் பற்றி விசாரித்தேன். அந்த சமயத்தில் கருப்பாயூரணி காவல் நிலையத்தில் இருந்து எனக்கு போன் வந்தது. உங்கள் மகன் அருண்குமாரா என்று கேட்டார்கள். நான் ஆமாம் என்று சொன்னபோது அருண்குமார் பிரேதமாக வரிச்சியூர் ரேசன் கடை அருகில் கிடப்பதாக சொன்னார்கள். நான், என் அண்ணன் சக்தி, தம்பி செல்வம் ஆகியோர் வரிச்சியூர் ரேசன் கடை பக்கம் சென்றோம். பிரேதத்தை பார்த்துவிட்டு என் மகன் அருண்குமார்தான் என்று அங்கிருந்த போலிசாரிடம் சொன்னேன். என் மகன் அருண்குமாருக்கு இரண்டு தோள் பட்டைகளிலும் வீக்க காயங்கள் இருந்தது. உதடு இரண்டு பக்கத்திலும் கிழிந்திருந்தது. கழுத்தில் இறுக்கப்பட்டது போல இரத்தக்காயம் இருந்தது. அதன் பின்னர் பிரேத பரிசோதனைக்காக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்னர் நான் போலிசாரிடம் விசாரித்தபோது சம்பவத்திற்கு முதல் நாள் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது என் மகன் அருண்குமாருக்கு சரவணன் போன் செய்து மதுரையில் வேலை வாங்கி தருவதாக கூறி மதுரைக்கு அழைத்தார் என்று சொன்னேன். பின்னர் போலிசார் என்னிடம் வினோத்மணியும், சரவணனும் ஒரு பெண்ணை விரும்பியதாகவும், அதில் வினோத்மணியை சரவணன் கொலை செய்துவிட்டதாகவும் அந்தக் கொலையில் இருந்து தப்பிப்பதற்காக என் மகன் அருண்குமாரை கொலை செய்ய வேண்டும் என்று இராமநாதபுரத்திலிருந்து கடத்தி வந்து மணலூர் ஜெயபாரத் அபார்ட்மெண்டில் வைத்து சரவணன், உதயகுமார், பால்பாண்டி ஆகியோர் மதுவில் விஷத்தை கலந்து கொலை செய்து விட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 01/2020** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW-4** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | லதா |
| Father/Husband Name | : | சுரேஷ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | இந்து |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2021

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் மாரியம்மன் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.3 சுரேஷ் என் கணவர் ஆவார். சாட்சி சக்தி என் கணவரின் சகோதரர் ஆவார். சாட்சி செந்தில்வேலன் என் உறவினர். இறந்துபோன அருண்குமார் என் மகன் ஆவார். 12.12.2014 அன்று மதியம் 2.30 மணியளவில் நான், என் கணவர், என் மகன் அருண்குமார், என் மகள் திவ்யா ஆகியோர் சேர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது என் மகன் அருண்குமாருக்கு போன் வந்தது. யார் என்று நான் கேட்டபோது சரவணன் என்ற அண்ணன் நன்றாக படித்தவர் என்றும் அவர் எனக்கு வேலை வாங்கி தருவதாக சொல்வதாகவும் சர்ச் பக்கத்தில் உள்ள பெட்ரோல் பல்க்கிற்கு வருமாறு தன்னை அழைத்ததாகவும் சொல்லிவிட்டு சென்றான். பின்னர் இரவு 9, 10 மணிக்கு போன் செய்தபோது அருண்குமாரின் போன் ஸ்விட்ச் ஆப் என்று வந்தது. திரும்பவும் போன் போட்டபோது ஸ்விட்ச் ஆப் என்று வந்தது. இரவு நாங்கள் தூங்கிவிட்டு மறுநாள் காலை எழுந்து என்

கணவருக்கு போன் செய்து அருண்குமார் வரவில்லை என்று சொன்னேன். என் மகன் வேலை பார்த்த எஞ்சினியருக்கு போன் போட்டு கேட்டபோது என் மகன் நேற்று மதியம் முதல் வரவில்லை என்று சொன்னார். பின்னர் என் கணவரும், என் மச்சான் சக்தியும் சேர்ந்து என் மகனைத் தேடி மதுரையில் உள்ள என் கொழுந்தன் செல்வம் வீட்டிற்கு சென்றார்கள். போலிசார் என் வீட்டிற்கு வந்து சுரேஷ் வீடு இதுதானா என்று கேட்டார்கள். உங்கள் மகன் அருண்குமாரா என்று கேட்டு அவனுடைய போட்டோவை கேட்டார்கள். மதுரையில் இருந்த என் கணவர் மற்றும் என் மச்சான் சக்தி ஆகியோர் கருப்பாயூரணி போலிசார் கொடுத்த தகவலின் பேரில் வரிச்சியூர் ரேசன் கடைக்கு அருகில் கிடந்த அருண்குமாரின் பிரேதத்தை பார்த்ததாக என் கணவர் எனக்கு தகவல் சொன்னார். அதன் பின்னர் நானும், என் மகளும், மற்றும் என் உறவினர்களும் சேர்ந்து மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சென்று என் மகன் அருண்குமாரின் பிரேதத்தைப் பார்த்தோம். என் மகனுக்கு கழுத்தில் கயிறு போட்டுஇறுக்கிய காயம் இருந்தது. வாயில் இருந்து இரத்தம் வந்திருந்தது. தோள்பட்டையிலும் காயம் இருந்தது.

போலிசாரிடம் விசாரித்தபோது வினோத்மணியும், சரவணனும் ஒரு பெண்ணை விரும்பியதாகவும், அதில் வினோத்மணியை சரவணன் கொலை செய்துவிட்டதாகவும் அந்தக் கொலையில் இருந்து தப்பிப்பதற்காக என் மகன் அருண்குமாரை கொலை செய்ய வேண்டும் என்று இராமநாதபுரத்திலிருந்து கடத்தி வந்து மணலூர் ஜெயபாரத் அபார்ட்மெண்டில் வைத்து சரவணன், உதயகுமார், பால்பாண்டி ஆகியோர் மதுவில் விஷத்தை கலந்து கொலை செய்து விட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 01/2020** |
| Sessions | .. | .. | } | |
| | | } | Prosecution – **PW-5** | |
| Deposition of witness for | | } | Defence – | |
| | | } | Court – | |

| | | |
|---|---|---|
| Name | : | சக்தி |
| Father/Husband Name | : | முனியாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | இந்து |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2021

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் மாரியம்மன் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். நான் லோடுமேன் வேலை பார்க்கிறேன். சாட்சி சுரேஷ் என் தம்பி ஆவார். லதா என் தம்பி மனைவி ஆவார். இறந்துபோன அருண்குமார் என் தம்பி மகன் ஆவார். கடந்த 12.12.2014 அன்று நான் எங்கள் வீட்டிற்கு முன்னால் இருந்த பெட்டிக்கடையில் இருந்தேன். அப்போது அருண்குமார் வீட்டிற்கு சாப்பிட போனான். பின்பு 3 மணியளவில் விட்டிலிருந்து திரும்பி வந்து நான் மதுரைக்கு போவதாக கூறினான். பின்னர் இரவு 9.30 மணியளவில் என் தம்பி மனைவி அருண்குமாரை காணவில்லை என்று கூறினார். பின்னர் நான் அவர் போனுக்கு போன் செய்தேன். போன் ஸ்விட்ச் ஆப் ஆகி இருந்தது. பின்னர் காலை 6.00 மணிக்கு நானும், என் தம்பி சுரேஷ்ம் மதுரையில் உள்ள செல்வம் வீட்டிற்கு சென்றோம். பின்னர் காலை 8.00 மணியளவில் என் தம்பி சுரேசிக்கு கருப்பாயூரணி போலிசார் போன் செய்து வரிச்சியூர் ரேசன் கடை அருகில் ஒரு பிரேதம் கிடக்கிறது என்றும் அது உங்கள் மகன் அருண்குமாரின்

பிரேதமா என்று பார்க்கவருமாறும் சொன்னார்கள். நாங்கள் வரிச்சியூர் ரேசன் கடைக்கு சென்று பார்த்தோம். என் தம்பி மகன் அருண்குமாரின் வாயில் இரத்தம் வந்ததை பார்த்துவிட்டு நான் தள்ளிநின்று விட்டேன். பிரேதத்தை மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டு போய்விட்டார்கள். போலிசாரிடம் விசாரித்தபோது வினோத்மணியும், சரவணனும் ஒரு பெண்ணை விரும்பியதாகவும், அதில் வினோத்மணியை சரவணன் கொலை செய்துவிட்டதாகவும் அந்தக் கொலையில் இருந்து தப்பிப்பதற்காக என் மகன் அருண்குமாரை கொலை செய்ய வேண்டும் என்று இராமநாதபுரத்திலிருந்து கடத்தி வந்து மணலூர் ஜெயபாரத் அபார்ட்மெண்டில் வைத்து சரவணன், உதயகுமார், பால்பாண்டி ஆகியோர் மதுவில் விஷத்தை கலந்து கொலை செய்து விட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 01/2020** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW-6** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | செந்தில்வேலன் |
| Father/Husband Name | : | பூமிநாதன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | இந்து |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2021

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் ஓம்சக்தி நகர் 11வது தெருவில் குடியிருக்கிறேன். நான் சொந்தமாக கார் வைத்து தொழில் செய்கிறேன். இறந்துபோன அருண்குமாரைத் தெரியும். அவர் என் நண்பர் ஆவார். சாட்சி சுரேஷ் தெரியும். அவர் அருண்குமாரின் அப்பா ஆவார். கடந்த 12.12.2014 அன்று நான் ரோமன் சர்ச் பெட்ரோல் பல்க்கில் நானும், பாலசுப்பிரமணியனும் காருக்கு பெட்ரோல் போட்டுக்கொண்டிருக்கும்போது அருண்குமார் எதிரி சரவணன் மற்றும் இருவர் ஆகியோர் சேர்ந்து ஒரு காரில் மதுரை ரோட்டில் ஏறிப்போய் கொண்டிருந்தார்கள். அதன் பின்பு அருண்குமார் கொலை செய்யப்பட்டு விட்டதாக செய்தித்தாளைப் பார்த்து தெரிந்து கொண்டேன். பின்னர் அருண்குமார் எப்படி கொலை செய்யப்பட்டார் என்பதை நான் விசாரித்தபோது வினோத்மணியும், சரவணனும் ஒரு பெண்ணை விரும்பியதாகவும், அதில் வினோத்மணியை சரவணன் கொலை செய்துவிட்டதாகவும் அந்தக் கொலையில் இருந்து தப்பிப்பதற்காக என் மகன் அருண்குமாரை கொலை செய்ய வேண்டும் என்று

இராமநாதபுரத்திலிருந்து கடத்தி வந்து மணலூர் ஜெயபாரத் அபார்ட்மெண்டில் வைத்து சரவணன், உதயகுமார், பால்பாண்டி ஆகியோர் மதுவில் விஷத்தை கலந்து கொலை செய்து விட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை – இல்லை.